| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை | | | | |
|---|---|---|---|---|---|
| MSSRF Science for Sustainable Development | இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | |
| மாவட்டம் : | **சிவகங்கை** | காலம் : | **20/01/2024** | முதல் | **24/01/2024** |
| அறிக்கை எண் : | **006/ 2024** | வெளியீட்டு நாள் : | **19/01/2024** | | |

## சிவகங்கை மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 31°- 32° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 19° - 21° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (14.01.2024 முதல் 18.01.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு –24-01-2024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14/01 | 15/01 | 16/01 | 17/01 | 18/01 | தேதி | நாள்-1 20/01 | நாள்-2 21/01 | நாள்-3 22/01 | நாள்-4 23/01 | நாள்-5 24/01 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 1 | 1 | 0 | 0 | 0 |
| 32 | 32 | 31 | 32 | 32 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 33 | 33 | 32 | 32 | 33 |
| 22 | 21 | 21 | 19 | 21 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 23 | 23 | 22 | 22 | 23 |
| 4 | 3 | 3 | 2 | 5 | மேக மூட்டம் (ஆக்டா) | 4 | 3 | 4 | 4 | 4 |
| 88 | 82 | 85 | 85 | 87 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 90 | 90 | 90 | 90 | 90 |
| 53 | 50 | 50 | 41 | 55 | | 60 | 50 | 50 | 50 | 40 |
| 6 | 7 | 7 | 6 | 8 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 16 | 16 | 14 | 12 | 14 |
| வட கிழக்கு | தென் கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு | வட கிழக்கு |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் ஜனவரி 20 மற்றும் 21ம் தேதி மிக லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 32°-33° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 22°-23° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 12 முதல் 16 கி.மீ வேகத்தில், வடகிழக்கு திசையிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

**அடுத்த வாரத்திற்கான விரிவாக்கபட்ட வரம்பு வானிலை முன்னறிவிப்பு (19ஜன - 01 பிப்ரவரி 2024):**

### மழைப்பொழிவு :

19-01-2024 - 01-02-2024: நீட்டிக்கப்பட்ட வரம்பு கணிப்புகளின்படி, வரும் வாரத்தில் மாவட்டத்தில் பொதுவாக வறண்ட வானிலையே நிலவ வாய்ப்பு உள்ளது

### அதிகபட்ச வெப்பநிலை :

காணப்படும். 28° செல்சியஸ் முதல் 32° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

**குறைந்தபட்ச வெப்பநிலை :**

19-01-2024 - 25-01-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் இயல்பானது முதல் இயல்பை விட சற்று அதிகரித்து காணப்படும். 16° செல்சியஸ் முதல் 20° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு.

26-01-2024 - 01-02-2024: மாவட்டத்தில் குறைந்தபட்ச வெப்பநிலையை பொருத்தமட்டில் பொதுவாக இயல்பை ஒட்டியே காணப்படும். 16° செல்சியஸ் முதல் 20° செல்சியஸ் வரை இருக்க வாய்ப்பு

அடுத்த சில நாட்களுக்கு வறண்ட வானிலேயே நிலவுவதால் பயிர் பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். மண்ணின் ஈரப்பதத்தை பொருத்து, காய்கறி பயிர்களுக்கு நீர் பாய்ச்சும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 12 முதல் 16 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்க்கொள்ளவும். கொடிவகை பயிர்களில் பந்தல்களில் துருபிடித்து பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : மிளகாய், வெண்டை, கால்நடை**

**மிளகாய்:**

மிளகாய்ப் பயிரில் இலைப் பேன் தாக்குதல் தென்படுகின்றது. இதன் தாக்குதலால் இலைகளில் சுருக்கங்கள் ஏற்படும், இலைகள் மேல் நோக்கி சுருண்டு விடும், இலைக் காம்பு நீண்டு விடும், செடிகளின் வளர்ச்சி குறைபடும், பூ மற்றும் காய்கள் உற்பத்தி தடைபடும், மொக்குகள் எளிதில் உதிர்ந்து விடும்.

இதன் தாக்குதலை குறைக்க அகத்தியை ஊடு பயிராக பயிரிடலாம்.

மிளகாய் நாற்றுகளின் மேற்பரப்பில் நீரைத் தெளித்து பேன்களின் பெருக்கத்தை கட்டுப்படுத்தலாம்.

மேலும் இதனைக் கட்டுப்படுத்த 10 லிட்டர் தண்ணீருக்கு 3 மிலி. என்ற அளவில் இமிடாக்குலோபிரிட் என்ற பூச்சிக்கொல்லி மருந்தினை கலந்து தெளிக்கவும்.

**வெண்டை:**

வெண்டை பயிரில் அசுவிணி தாக்குதல் பரவலாக தென்படுகின்றது. இவ்வகையான பூச்சிகள் இலையின் அடிப்பாகத்திலும், குருத்துப் பகுதிகளிலும் இலைச் சாற்றை உறிஞ்சி வாழும், இலைகள் சுருங்கி, சுருண்டு விழுந்து விடும் மேலும் செடியின் வளர்ச்சியும் குன்றி விடும்.

ஒரு ஹெக்டேருக்கு 100 மில்லி இமிடாகுளோ.்.பிரிட் (ஹெக்டேருக்கு 500 லிட்டர் தெளித்திரவம்) அல்லது 500 மில்லி வேப்பங்கொட்டை வடிநீர் இவற்றுள் ஏதேனும் ஒன்றை தெளித்து கட்டுப்படுத்தலாம்.

இரவு மற்றும் அதிகாலை நேரங்களில் தற்போது நிலவிவரும் அதிக பனி காரணமாக தங்களது கால்நடைகளை குந்து நோய் தாக்க வாய்ப்பு உள்ளது.

இதனை தவிர்க்க பனிகாலங்களில் தங்களது கால்நடைகளை வெட்டவெளியில் பனியில் கட்டாமல் பாதுகாப்பாக கொட்டகைகளில் கட்டி வைக்கவும். மாட்டுக் கொட்டகைகளின் பக்கவாட்டில் சணல் சாக்குகளை கட்டி வைக்கவும்.